## தலைப்பு 299 – இலங்கை புலமைச் சொத்துக்கள் அலுவலகம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 மே 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 ஜூலை 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான இலங்கை புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்

செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான எனது அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

| அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு** | **இணக்கமின்மை** | | |
| 2018 ஜனவரி 24 திகதிய 02/2018 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரிவுகள் 01 மற்றும் 05 | ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்குமாக செயலாற்றுகை உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு, திணைக்களத்துள் செயற்படும் மனிதவள திட்டம் உட்பட அபிவிருத்தி செய்வதற்காக மனிதவள அபிவிருத்தித் திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக அவ்வாறு செய்திருக்கவில்லை. | மனிதவள அபிவிருத்தித் திட்டம் தயாரித்தல் 2020 ஆண்டின் போது உதவிப் பணிப்பாளர்(திட்டமிடல்) வெற்றிடம் நிரப்பப்பட்ட பின்னர் ஆரம்பிக்கப்பட்டதுடன், குறிப்பிட்ட திட்டத்தை செயற்படுத்தும் போது, வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கை கையொப்பமிடல், பதவி நிலை உத்தியோகத்தர்களுக்காக நிரப்பப்பட்ட போதிலும் ஒட்டுமொத்த பதவியணிக்காக அதனை நிரப்புவதற்கு முடியாமல் போனது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க வேண்டியிருந்தது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பாதீட்டு பிரேரணை ஒன்றின் படி வியாபாரச் சின்னங்களை சர்வதேச மட்டத்தில் பதிவு செய்வதற்காக வசதிகள் வழங்கும் மெட்ரிட் கூட்டுப் பத்திரத்தின் படி | 2020 பெப்ரவரி 20 திகதிய அமப/20/0139/215/009 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி ICTA நிறுவனத்துடன் மீண்டும் | கால தாமதம் இன்றி குறிப்பிட்ட விடயத்தை விரைவாக நிறைவேற்றிக் கொள்வதற்காக உடன்படிக்கை மேற்கொண்டு |

பிரவேஷிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 100 மில்லியன் இற்கான ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக தேவையான சேவர் இயந்திரங்கள் கொள்வனவு செய்தல், நிறுவுதல் மற்றும் பராமரிப்பு அலுவல்களுக்காக இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் முகவராண்மை (ICTA) தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 30 திகதி அந்த நிறுவனத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றுக்கு அணுகியிருந்தது.
உடன்படிக்கையின் படி 06 மாத காலப் பகுதியில் குறிப்பிட்ட வேலையை பூர்த்தி செய்ய வேண்டியிருந்ததுடன், மூன்று வருடங்களுள் செலுத்த வேண்டிய ரூபா 7.5 மில்லியனிற்கான பராமரிப்புச் செலவுடன் ரூபா 32.5 மில்லியன் தொகை உடன்படிக்கை மேற்கொண்ட திகதியிலே குறிப்பிட்ட நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.
உடன்பட்டவாறு அக் கருமத்தை நிறைவேற்றாமையால் மீண்டும் ஒருமுறை அந்த நிறுவனத்துடன், உடன்படிக்கையொன்றிற்கு அணுகுவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி குறிப்பிட்ட அமைச்சின் செயலாளருக்கு 2020 பெப்ரவரி 20 திகதிய அமப/20/0139/215/009 இலக்கம் கொண்ட அமைச்சரவை பத்திரத்தின் மூலம் வழங்கியிருந்த ஆலோசனையின் படி சமர்ப்பிக்கப்பட்டிருந்த வரைபு புரிந்துணர்வு உடன்படிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்தின் அவதானிப்புக்கள் 2021 ஆகஸ்ட் 20 திகதி கிடைத்திருந்தது. அவ்வாறாயினும், 2022 ஏப்ரல் 30 திகதி அது தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று அணுகியிருக்கவில்லை. அதேபோல் இந்த உடன்படிக்கைக்கு நுழையும் போது புலமைச் சொத்து சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் மேற்கொள்வதற்காக 2020 பெப்ரவரி உடன்படிக்கையொன்று மேற்கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழங்கியிருந்த அவதானிப்புக்களை கவனத்தில் எடுத்து அந்த அவதானிப்புக்களின் படி தயாரிக்கப்பட்ட உடன்படிக்கையின் வரைபு அவதானிப்புக்காக 2022 பெப்ரவரி 17 திகதி ICTA நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டதுடன், அந்த வரைபுக்கான முதலாவது ஞாபகமூட்டல் கடிதமும் 2022 ஏப்ரல் 04 ஆந் திகதி ICTA நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு தேவையான அலுவல்கள் மேற்கொள்ள வேண்டும்.

20 திகதிய அமப/20/0154/215/011 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கிகாரம் கிடைத்திருந்த போதிலும், ஆரம்ப வரைபு சட்டவரைஞர் திணைக்களத்திலிருந்து மீளாய்வாண்டு ஆகஸ்ட் மாதம் கிடைத்த பின்னர் அது தொடர்பாக வேறு தொடர் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

**4. நல்லாளுகை**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உள்ளகக் கணக்காய்வாளர் பதவி 2019 ஏப்ரல் மாதம் முதல் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை அந்த பதவி வெற்றிடமாக காணப்படுவதனால் 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 40 இன் ஏற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு அலகின் கருமங்கள் ஆரம்பிப்பதற்கு தகைமையுடைய உத்தியோகத்தர் ஒருவரை இணைத்துக்கொள்வதற்காக வரிசை அமைச்சு மற்றும் இணைந்த சேவை பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு வேண்டுதல்கள சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால் மற்றும் ஞாபகமூட்டலும் அனுப்பப்பட்டன. | அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு பொருத்தமாக இருக்க வேண்டும். |

**5 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | இரண்டாம் மட்டத்தில் காணப்பட்ட 13 வெற்றிடங்களில் 09 பேட்டன்ட் பரிசோதகர் பதவிகளுக்கானதுடன், அந்தப் பதவிக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை 10 ஆகும். அதன்படி, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 90 சதவீதம் 05 வருட காலமாக வெற்றிடமாக காணப்பட்டது. அந்தப் பதவிகளில் தற்போது கடமையாற்றும் மூன்று அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு நடைமுறையை திருத்தி | ஊழியர் வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்கள் நியமனம் செய்வதற்காக வரிசை அமைச்சு மற்றும் இணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்திற்கு வேண்டுதல்கள் சமர்ப்பிக்கப்பட்டு ஞாபகமூட்டல் கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளது. | பேட்டன்ட் பதிவு செய்யும் செய்முறையுடன் நேரடியாக தொடர்புபடுவதனால் ஆட்சேர்ப்புக்காக தாமதப்படுத்தக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | பரிட்சையொன்றின்றி ஆட்சேர்ப்பதற்காக அரச சேவை ஆணைக்குழுவிடம் வேண்டப்பட்டுள்ளது. | | |
| (ஆ) | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் காணப்படும் 02 வெற்றிடங்களுக்காக விண்ணப்பித்திருந்த போதிலும் அவ் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்கள் நியமனம் செய்து கொள்வதற்காக வரிசை அமைச்சு மற்றும் இணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்திற்கு வேண்டுதல்கள் சமர்ப்பிக்கப்பட்டு ஞாபகமூட்டல்களும் அனுப்பப்பட்டுள்ளது. | திணைக்களத்திற்கு தகவல் மற்றும் தொடர்பாடல் வலையமைப்பொன்று நிறுவுவதற்கு திட்டமிட்டுள்ளதால் அந்த பதவிகளின் உத்தியோகத்தர்கள் தேவையினை நிரப்பிக் கொள்ள வேண்டும். |